சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இளைஞர்களை ஊக்குவியுங்கள்



இன்றைய இளைஞர்கள் உயிரோட்டத்தோடும், சிறந்த லட்சியங்களோடும், ஊக்கத்துடனும் இருக்கிறாங்கள். எனவே, அவர்கள் ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் சற்று மிகைப்படுத்தி செய்துவிடுகிறார்கள். ஆனால், இந்த உலகத்தில் ஏதாவது ஆக்கப்பூர்வமான வேலைகள் நடக்க வேண்டுமானால், அது இளைஞர்களால்தான் முடியும். அதே நேரத்தில் ஏதாவது நாசகரமான வேலைகள் நடக்க வேண்டுமானாலும், அதுவும் இளைஞர்களால்தான் முடியும்.

வயதான தலைமுறையினர், இளைஞர்களை சிகிச்சை தேவைப்படுகிற ஒரு நோயைப் போலத்தான் கையாளுகிறார்கள். உண்மையில் இளைஞர்களுக்கு எந்தச் சிகிச்சையும் தேவையில்லை. வாழ்க்கையைவிட்டு மிகவும் விலகிப் போய்விட்ட மனிதர்களுக்குத்தான் சிகிச்சை தேவை. வாழ்க்கையுடன் நெருக்கமாக இருப்பவர்கள் நன்கு வாழ்கிறார்கள். இளைஞர்கள் எப்போதும் ஒரு உயர்ந்த சக்தியுடன் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான வழிகாட்டுதலோ, தூண்டுதலோ கிடைக்கவில்லை என்றால், அவர்களது சக்தி எளிதில் எதிர்மறையாகிவிடும்.

நமது கல்விமுறை 100 சதவீதம் தகவல் அளிப்பதாகத்தான் இருக்கிறது. அது ஒரு தூண்டுகோலாக, ஊக்கம் கொடுப்பதாக இல்லை. ஊக்குவிப்பவர் இல்லையென்றால், ஒரு மனிதன் அவனுடைய எல்லைகளைத் தாண்டி உயர முடியாது. வெறும் தகவல் தேவை என்றால், அது உங்களுக்கு எங்கு வேண்டுமானாலும் கிடைக்கும். ஒரு ஆசிரியரிடம் இருந்துதான் கிடைக்க வேண்டும் என்பதில்லை

தகவல் தொடர்பைப் பொறுத்தமட்டில், ஒரு ஆசிரியர் சிறந்தவராக இருக்க முடியாது. ஏனென்றால்... புத்தகங்களும், வலைத்தளங்களும் இந்த வேலையை இன்னும் சிறப்பாகச் செய்யும்.

ஒரு ஆசிரியரின் பங்கு மாணவரை கற்கத்தூண்டுவதாக அறிவுக்கான தாகத்தை உருவாக்குவதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆசிரியரின் பங்கில் பொருள் இருக்கும். அவர் வெறும் தகவல் கொடுப்பவராக இருக்க முயற்சிக்கும்போது, மற்ற தகவல் தொடர்பு சாதனங்கள் அவ்வேலையை அவரைக் காட்டிலும் மிகச் சிறப்பாகச் செய்யும். அப்போது அவையே சிறந்தவை என்றாகிவிடும்.

கல்விமுறையை முற்றிலும் தகவல் தொடர்புடையதாய் செய்திருப்பது நம் நாட்டில் ஏராளமான சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது. நீங்கள் இளைஞராய் வாழ்க்கையில் இருந்த நேரத்தில், பல விஷயங்கள் செய்யக் கூடியவராய் இருந்த நேரத்தில், துரதிர்ஷ்டவசமாக உங்களுக்குத் தேவையான தூண்டுகோல் இல்லாததால் உங்கள் வாழ்க்கையின் முக்கிய காலம் பயனற்றுப் போய் இருக்கிறது.

பொதுவாக தலைவர்கள் பலரும் வெளிப்புறத்தில் ஒரு எதிரியை உருவாக்கியே மக்களை ஈர்த்திருக்கிறார்கள். ஆனால், உண்மையான எதிரி உங்களுக்குள்ளேயே இருக்கிறான். உங்களுடைய வரையறைகள் எல்லைகள்தான் உங்கள் பெரிய எதிரி. பயம், கோபம், பதற்றம், வெறுப்பு போன்ற குறைபாடுகள்தான் உங்களை துன்பத்தில் தள்ளுகின்றன. எனவே, அவைதான் உங்களது மிகப்பெரிய எதிரி. உங்களுக்குள்ளேயே எதிரி இருக்கும்போது, உங்களிடம் பெரிய பொறுப்பும், அர்ப்பணிக்கும் உணர்வும் இருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக பொறுப்புணர்ச்சியும், அர்ப்பணிப்பு உணர்வும் இந்த உலகத்தில் பற்றாக்குறை பொருட்களாய் ஆகிவிட்டன. எல்லோரும் இளைஞர்களை அற்புதமான நிலைகளுக்கு ஊக்குவிப்பது பற்றியே நினைக்கிறார்கள். ஆனால் இது ஒரே நாளில் நடக்காது.

ஒரு செடி உங்களுக்கு பழம் கொடுக்க வேண்டுமானால், அதை தினமும் பேணி வளர்க்க வேண்டும். தண்ணீர் ஊற்ற வேண்டும். இந்த அர்ப்பணிப்பு உணர்வு வயதானவர்க்ளுக்கு இருக்குமானால், இளைஞர்களால் பல அற்புதமான செயல்களை எளிதாக செய்ய முடியும். இந்த அர்ப்பணிப்பு உணர்வு பெரியவர்களிடம் இல்லாததால்தான் இளைஞர்கள் திசைமாறி, என்ன செய்வதென்றே தெரியாமல்– தங்களுக்குத் தோன்றியதையெல்லாம் செய்து வருகிறார்கள். எல்லோருமே குறுகிய கால இலக்குகளை நோக்கிச் செயல்படுவதால், இளைஞர்களும் குறுகிய கால இலக்குகளை நோக்கிச் செயல்படுகிறார்கள்.

இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதரும், மனித நலன் பற்றி வெவ்வேறு அளவுகளில் அக்கறை கொண்டுள்ளனர். சிலர் மனித நலன் என்றால் தனது நலன் என்ற கருத்தில் இருக்கிறார்கள் இளைஞர்கள் மற்றும் எல்லோரிடமும் ஒரு பெரிய விஷயம் நடக்க வேண்டும் அது என்னவென்றால், மனிதன் பற்றிய அடையாளம் முழு சமூகத்தையும், இந்த உலகத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் நவீன கல்விமுறை, மக்களைத் தொடர்ந்து தங்களைப் பற்றி மட்டுமே நினைத்துக்கொள்ள பயிற்சி அளிக்கிறது. முதலில் நாம் இந்த பூமியையும், பிறகு மரம் செடி கொடிகளையும், விலங்குகளையும், கடைசியில் மனிதர்களையும் உபயோகப்படுத்துகிறோம்.

தகவல் அறிவைக் கொடுப்பதற்காக எப்படி நேரம், சக்தி முதலியவற்றை முதலீடு செய்கிறோமோ அவ்வாறே நமது இளைஞர்களை ஊக்குவிப்பதற்கும் அவற்றை முதலீடு செய்ய வேண்டும். இது நடந்துவிட்டால், நமது உலகம் உண்மையிலே அழகாக மாறும்.